Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II COURT, KARUR

CC No.220/2025

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW-1<br>Defence<br>Court |

| | | |
|---|---|---|
| Name | : | குடியரசு |
| Father's Name | : | ராஜலிங்கம் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of (44 of 1969) of the day of 08.10.2025
எதிரி ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

1) நான் தற்போது கரூர் மாவட்ட அரசு வழக்கறிஞராக பணியாற்றி வருகிறேன். கடந்த 08.05.2021 அன்று நான் கரூர் மாவட்ட திராவிட முன்னேற்ற கழக மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளராக இருந்த போது மாலை சுமார் 7 மணியளவில் என்னுடைய அலுவலகத்தில் கணினியை பார்த்து கொண்டிருந்த போது, Youtube என்ற இணையதளத்தில் ஆஜர் எதிரி அப்போதைய காலகட்டத்தில் தமிழக

ஓம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

அமைச்சரவையில், மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை அமைச்சராக பதவியேற்றிருந்த செந்தில்பாலாஜி அவர்களை பற்றி அவர் பதவியேற்றவுடன் சில மணிநேரங்களில் கரூர் ஆற்று பகுதியில் மாட்டுவண்டியில் மணல் அள்ளலாம் என்று கூறி அமைச்சர் சொன்னதாக சொல்லி அந்த சேனலில் தொடர்ச்சியாக வேறு எங்கேயோ பொக்லைன் மூலமாக லாரிகளில் மணல் அள்ளுவது போன்ற படத்தை அதில் வெளியிட்டு அமைச்சருக்கும், தமிழ்நாடு அரசுக்கும் அனுமதியின்றி மணல் அள்ளலாம் என்ற தோற்றத்தை ஏற்படுத்தியிருந்தார். மேற்படி காட்சியை பார்த்தவுடன் நான் அதிர்ச்சியடைந்தேன். உள்நோக்கத்தோடு இருபிரிவினரிடையே கலகத்தை தூண்டும் விதத்திலும், தி.மு.க. மற்றும் நாம் தமிழர் கட்சியினரிடையே சமுதாயத்தில் பகையை ஏற்படுத்தும் விதமாகவும் காட்சிபடுத்தி பொதுவெளியில் வெளியிட்டிருந்தார். அதை நான் என்னுடைய செல்போனில் பதிவிறக்கம் செய்து PUMA என்ற C.D.–ல் பதிவேற்றி கரூர் சைபர் கிரைம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். **அந்த புகார் அ.சா.ஆ,1 ஆக குறியீடு செய்யப்படுகின்றது.** என்னிடம் காட்டப்படும் C.D. நான் காவல்துறையினரிடம் கொடுத்தது தான். **அந்த C.D. அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகின்றது.** அந்த C.D. உடன் இணைந்து சாட்சிய சட்டம் பிரிவு 65–B–ன் படியான சான்றிதழையும் காவல்துறையினரிடம் தாக்கல் செய்தேன். **அந்த சான்றிதழ் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகின்றது.** இது சம்மந்தமாக சைபர் கிரைம் போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

எதிரி தரப்பு வழக்கறிஞர் திரு.SELVA.Nanmaaran அவர்களுக்காக வழக்கறிஞர் திரு.S.சம்பத் அவர்கள் ஆஜராகி எதிரியின் சம்மதத்துடன் அ.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

புகார் கொடுத்த தேதியன்று நான் தி.மு.க. வழக்கறிஞர் அணி மாவட்ட அமைப்பாளராக இருந்தேனா என்றால் சரிதான் ஆனால் தற்போது இல்லை. புகார் கொடுத்த காலகட்டத்தில் நான் அரசு வழக்கறிஞராக இல்லை. நான் புகார் கொடுத்த போது அ.சா.பொ.1 C.D. ஐயும் சேர்த்து தான் கொடுத்தேனா என்றால் சரிதான். எனது புகாரில் மேற்படி வீடியோவை செல்போனில் பார்த்ததாக தான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். போலீசார் என்னை எந்த தேதியில், எத்தனை மணிக்கு எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் புகார் கொடுத்த உடனே C.D ஐ வாங்கி பார்த்துவிட்டு என்னை

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

விசாரணை செய்தார்கள். 08.05.2021-ம் தேதியன்று இரவு 11 மணியளவில் கரூர் மாவட்ட சைபர் கிரைம் காவல்நிலையத்தில் வைத்து விசாரணை செய்தார்கள். போலீசார் விசாரணையில் எந்த Application மூலமாக பதிவிறக்கம் செய்தேன் என்றால் Youtube சாட்டை துரைமுருகன் Channel-ல் இருந்து நேரடியாக எனது செல்போனில் பதிவிறக்கம் செய்தேன். அவ்வாறு Youtube-ல் இருந்து நேரடியாக பதிவிறக்கம் செய்ய முடியாது என்றால் சரியல்ல. நான் பதிவிறக்கம் செய்ததாக சொல்லப்படும் எனது செல்போன் எந்த நிறுவனத்தை சார்ந்தது என்றோ அதன் Model என்ன என்றோ போலீசார் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் மேற்படி காட்சியை கணினியில் பார்த்ததாக சொல்லப்பட்டுள்ளதில், அது என்ன வகையான கணினி உள்ளிட்ட விபரங்களை சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் பொதுவாக தி.மு.க. நடத்தும் அனைத்து கட்சி கூட்டங்களிலும் கலந்து கொள்வது வழக்கம் என்றால் சரிதான். 18.03.2021.ம் தேதியன்று கரூர் பஸ் ஸ்டான்ட் ரவுண்டனா அருகில் தி.மு.க. தேர்தல் பணிமனை திறப்பு விழாவில் கலந்து கொண்டேனா என்றால் ஞாபகமில்லை. அவ்வாறு கலந்து கொள்ளாத தி.மு.க. நிகழ்ச்சிகளில் என்ன நடந்தது என்பது பற்றி கேட்டு தெரிந்து கொள்வேனா என்றால் முக்கியமான சங்கதிகளை கேட்டு தெரிந்துகொள்வேன். நான் பார்த்ததாக சொல்லப்படும் வீடியோவில் செந்தில்பாலாஜி அமைச்சராக பதவியேற்றுவிட்டார் என்ற வாசகம் இல்லை என்றால் சரியல்ல. செந்தில்பாலாஜி அமைச்சராக பதவியேற்ற தேதி 05.05.2021 ஆகும். நான் சொல்வது போல் 05.05.2021 -ம் தேதியன்று செந்தில்பாலாஜி அமைச்சராக பதவியேற்கவில்லை என்றால் சரியல்ல. செந்தில்பாலாஜி பதவியேற்ற தேதி 06.05.2021 என்றால் எதிரி தரப்பில் சொல்வது போல் இருக்கலாம் தேதி சரியாக ஞாபகமில்லை. 18.03.2021-ம் தேதியன்று மேற்சொன்னது போன்று தேர்தல் பணிமனை திறப்புவிழாவின் போது, ஸ்டாலின் முதலமைச்சராக காலை 11 மணியளவில் பதவியேற்றால் 11.05 மணிக்கு மாட்டு வண்டிய ஆத்துக்கு ஓட்டுங்க எந்த அதிகாரியும் தடுக்க மாட்டாங்க அப்படி தடுத்த அந்த அதிகாரி அங்க இருக்கமாட்டங்க என செந்தில் பாலாஜி பேசினார் என்றாலும், அந்த செய்தி அனைத்து ஊடகங்கள் மற்றும் செய்தித்தாள்களிலும் வெளியிடப்பட்டது என்றாலும், அனைத்து ஊடகங்களில்

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

அதனை விவாதப் பொருளாக வைத்து பேசப்பட்டது என்றாலும் சரியல்ல. போலீசார் என்னை விசாரித்ததாக முதல்விசாரணையில் சொல்லியுள்ள தேதிக்கு பின்பு மறுவிசாரணை எதுவும் போலீசார் செய்தனரா என்றால் ஞாபகமில்லை. மேற்படி செந்தில்பாலாஜி சொன்னதாக மேற்சொல்லப்படும் சர்ச்சைக்குரிய வாசகம் சம்மந்தமாக கரூர் நகர காவல்நிலையத்தில் செந்தில்பாலாஜி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

2. நான் சொல்வது போல் எதிரி கலகத்தை தூண்டும் வகையில் எந்த வீடியோவையும் பதிவிடவில்லை என்றாலும், அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில் நான் பதிவிறக்கம் செய்து கொடுத்த வீடியோவை நான் பார்க்கவில்லை என்றாலும், நான் சொல்வது போல் பதிவிறக்கம் செய்யவில்லை என்றாலும், பொய் வழக்கு தாக்கல் செய்வதற்காக அ.சா.பொ.1–ஐ நான் உற்பத்தி செய்துள்ளேன் என்றாலும், அதன் காரணமாகவே நான் பயன்படுத்திய செல்போன் மற்றும் கணினியை போலீசார் விசாரணையில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஓம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்
நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II COURT, KARUR

CC No.220/2025

| | | |
|---|---|---|
| Deposition of Witness for | | Prosecution PW-2<br>Defence<br>Court |
| Name | : | பாண்டியன் |
| Father's Name | : | அங்கமுத் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of (44 of 1969) of the day of 08.10.2025
எதிரி ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கரூரில் வழக்கறிஞராக பணிபுரிந்து வருகின்றேன். கடந்த 2021-ம் ஆண்டு கரூர் மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளராக இருந்தேன். கடந்த 08.05.2021 அன்று மாலை எனது கணினியில் Youtube பார்த்து கொண்டிருந்த போது ஆஜர் எதிரி நடத்தி வரும் சாட்டை என்ற Youtube Channel-ல் நான் சார்ந்திருக்கும் கட்சியை சார்ந்த கரூர் சட்டமன்ற உறுப்பினரும், மாண்புமிகு மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை அமைச்சர் திரு.செந்தில்பாலாஜி பதவியேற்பதற்கு முன்பாகவே காவேரி

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

ஆற்றில் மணல் அள்ள அனுமதி அளித்தது போலவும், அவ்வாறு லாரிகளில் மணல் அள்ளுவதை போலவும், எங்கேயோ எப்போதோ எடுத்த புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை பதிவேற்றம் செய்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களது நற்பெயருக்கு களங்கம் ஏற்படும் வகையில் செய்திகளை வெளியிட்டிருந்தார். இது சம்மந்தமாக நான் பார்த்த Youtube channel Video உடன் கரூர் மாவட்ட இணையவழி குற்ற காவல்நிலையத்திற்கு புகார் அளிக்க சென்றேன். அப்போது எங்களது கட்சியை சார்ந்த திரு.குடியரசு அவர்களும் மேற்படி சம்பவம் தொடர்பாக மேற்படி காவல்நிலையத்தில் புகார் அளித்திருந்தார். எனவே, நான் மேற்படி புகாரில் சாட்சியாக மட்டும் இருந்து கொண்டேன். இது சம்மந்தமாக சைபர் கிரைம் போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். மேற்படி எதிரியின் செய்கையானது அமைச்சரின் பெயருக்கு கலங்கம் விளைவிக்கும் வகையிலும், பொது அமைதிக்கு குந்தகம் ஏற்படும் வகையிலும் இருந்துள்ளது.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

எதிரி தரப்பு வழக்கறிஞர் திரு.SELVA.Nanmaaran அவர்களுக்காக வழக்கறிஞர் திரு.S.சம்பத் அவர்கள் ஆஜராகி எதிரியின் சம்மதத்துடன் அ.சா.2–ஐ குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

1. அ.சா.1–ஐ விசாரித்த தேதியன்றே என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கொண்டார்களா என்றால் அன்றைய தினம் விசாரித்து விட்டு மறுநாள் தான் எனது வாக்குமூலம் பதிவு செய்தார்கள். அதன்பின்னிட்டு என்னை காவல்துறையினர் மறுவிசாரணை எதுவும் செய்யவில்லை. நான் புகார் கொடுக்க சென்றதாக சொல்லியுள்ள நிலையில், அந்த புகாரினை காவல்துறையினரிடம் கொடுத்தேனா என்றால் நான் எழுத்துப்பூர்வமாக கொண்டு சொல்லவில்லை காவல்நிலையத்தில் தெரிவித்து விட்டு பின்பு எழுதிக் கொள்ளலாம் என்று சென்றேன். போலீசார் என்னை விசாரணை செய்த போது நானும் மேற்படி வழக்கு சம்மந்தான புகார் கொடுக்க வந்தேன் என்றும், அ.சா.1 புகார் கொடுக்க வந்ததால் அப்புகாரில் சாட்சியாக இருந்து கொண்டேன் என்ற விபரத்தை விசாரணை செய்த போலீஸ் அதிகாரியிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். அந்த விபரங்களை போலீசார் பதிவு செய்து கொண்டார்களா என்றால் எனக்கு தெரியாது.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

போலீசார் என்னை எத்தனை மணிக்கு விசாரணை செய்தார்கள் என்றால் புகார் கொடுக்க சென்ற இரவு 11 மணிக்கும், மறுநாள் காலை 11 மணிக்கும் விசாரணை செய்தார்கள்.

2. நான் சொல்வது போல் எதிரி கலகத்தை தூண்டும் வகையில் எந்த வீடியோவையும் பதிவிடவில்லை என்றாலும், சர்ச்சைக்குரிய காணொளி எதையும் நான் பார்க்கவில்லை என்றாலும், காவல்நிலையம் செல்லவில்லை என்றாலும், அ.சா.ஆ.1 புகாரில் நான் சாட்சியாக இருக்கவில்லை என்றாலும், அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக எதிரி மீது கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/−எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.